**JUDICIAL MAGISTRATE COURT, No.II CHENGALPATTU**

**CC No. 291/2020**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE, No.II CHENGALPATTU. |
| Deposition of witness for | :PW 1 |
| Name | : பிரபாகர் |
| Father's Name | : ராஜாராம் |
| Village | : பாண்டிசேரி |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.11.2022.

**குறுக்கு விசாரணை –**

நான் பாண்டிசேரியில் நெம்பர் 119 AFT காலேனி, ராஜீவ்காந்தி நகர், பூரணங்குப்பத்தில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கினை கருணாகரன் என்பவர் மீது மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள புகாரில் 1 வது எதிரியாக ஜி.கே. ரெஸ்டாரண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரி எனக்கு ரூபாய் 22,83,175/– தரவேண்டியதற்காக நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு சம்பந்தமான 2 காசோலைகள் வங்கி கணக்கு முடப்பட்டுள்ளது என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது. அந்த காசோலை எண்கள் என்னவென்றால் 11191 மற்றும் 11192. மேற்சொன்ன இரண்டு காசோலைகளிலும் இரண்டு கையொழுத்துகள் இருந்தன. அந்த இரண்டு காசோலைகளிலும் கருணாகரனின் கையொழுத்து இருந்தது. மற்றொரு கையொழுத்து யாருடைய கையொழுத்து என்று எனக்கு தெரியாது. இந்த காசோலைகளை கருணாகரன் 2020ல் என்னுடைய ஊரப்பாக்கம் அலுவலகத்தில் வைதது கொடுத்தார். அந்த காசோலைகளை எதிரி கருணாகரன் பூர்த்தி செய்து என்னிடம் கொடுத்தார். பொதுவாக நான்

கடனுக்கு தான் அரிசினை வியாபாரம் செய்வேன். ஆவணம் எதுவும் நான் கொடுக்கும் கடனுக்காக வாங்குவதில்லை. என்னிடம் காட்டப்படும் **மசா.ஆ 11ன்** படி பிரனவ் ஏஜென்சி சிவகுமார் அவருடைய கம்பெனிக்கு மேலாளராக என்னை 01.10.2016 தேதி நியமித்தார். 6 மாத காலமாக மேற்சொன்ன சிவகுமார் முதலாளியாக இருந்தார். அதன் பிற்பாடு சிவகுமார் மேற்சொன்ன நிறுவனத்தில் இருந்து விலகினார்.

2. 2016 பிறகும் பிரனவ் ஏஜென்சி நிலுவையில் இருந்தது. சிவகுமார் விலகிய பிறகு நானும், எனது நண்பர் கணேஷ் என்பவரும் நிறுவனத்தை நடத்தி வந்தோம். நாங்கள் இருவரும் பாட்னாராக இருந்து நிறுவனத்தை நடத்தி வந்தோம். இதன் தொடர்பாக நாங்கள் ஆவணம் ஒன்று எழுத்திகொண்டோம். அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அரசு விதிமுறையின்படி நாங்கள் போட்டுகொண்ட ஒப்பந்ததை பதிவு செய்யவில்லை. நாங்கள் போட்டுகொண்ட பதிவு செய்யபடாத ஒப்பந்ததை நான் நீதிமன்றம் கோரும் பட்சத்தில் தாக்கல் செய்வேன். நாங்கள் நடத்தி வந்த வியாபாரத்திற்கு நாங்கள் ஜிஎஸ்டி கட்டி வந்தோம். நாங்கள் கட்டிய ஜிஎஸ்டி சம்பந்தமான ஆவணங்கள் அனைத்தும் ஆடிட்டாரிடம் கொடுத்துள்ளேன். அந்த ஆவணங்களை நீதிம்ன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 28.04.2018 வரை இந்த நிறுவனத்தினை நாங்கள் நடத்தி வந்தோம். 2017 ஆகஸ்ட் மாதத்தில் நான் எதிரிக்கு அரிசி விற்பனை செய்தேன். நானும் கணேசும் நிறுவனத்தை நடத்தி வந்த கால கட்டத்தில் தான் அரிசினை எதிரிக்கு விற்பனை செய்தேன். என்னிடம் காட்டப்படும் மசா.ஆ.11னின் படி நானும் கணேஷ்ம் நடத்தி வ்ந்த நிறுவனத்தை பிரனவ் ஏஜென்சியின் நபர்களான கலைவாணி மற்றும் கல்யாணி ஆகியோரிடம் ஒப்படைத்தோம்.

3. தற்போது பிரனவ் ஏஜென்சி நிறுவனம் இல்லை. நாங்கள் நடத்திவந்த நிறுவனத்தின் அனைத்து ஆவணங்களையும் ஒப்படைத்துவிட்டோம். கல்யாணி மற்றும் கலைவாணி சார்பாக நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் **மசா.ஆ 11ன்** படி நான் பங்குதாரா என்றால் 18.04.2018 முதல் பங்குதாராக இருந்ததில்லை. கலைவாணி மற்றும் கல்யாணி என்னை இந்த வழக்கினை அவர்கள் சார்பாக தாக்கல் செய்தவதற்காக எழுத்தி கொடுத்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன், அவை **மசா.ஆ 9**

ஆகும். கருணாகரன் மற்றும் ஜிகே ரெஸ்டாரண்ட் பங்குதாரர்கள் என்பது எனக்கு தெரியாது. காசோலையை கொடுக்கும்போதுதான் எனக்கு தெரியும். மற்றொரு பங்குதாரான குணசேகரனை எனக்கு தெரியும் என்றால் தெரியாது. குணசேகரன் இறந்துவிட்ட விவரம் எனக்கு தெரியாது. குணசேகரனும், கருணாகரனும் எழுதப்படாத, கையொப்பம் மட்டும் செய்து கொடுத்த காசோலைகளை நான் பூர்த்தி செய்துகொண்டு இந்த வழக்கினை எதிரிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இரண்டு காசோலைகளையும் 27.02.2020ல் வங்கியில் செலுத்தினேன். குணசேகரன் இறந்த 2 வருட காலத்திற்கு பிறகு அந்த பூர்த்தி செய்யபடாத காசோலைகளை நான் பூர்த்தி செய்து கொண்டு எதிரிகள் மீது இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குணசேகரன் இறந்துவிட்ட படியால்தான் வங்கி கணக்கு முடப்பட்டுள்ளது என்று காசோலைகள் திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். புகாரின் மீது காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காவல் நிலையத்தில் நான் எந்த பணத்தையும் பெற்றுகொள்ளவில்லை. எதிரி கொடுத்த காசோலைகளின் விவரம் நிறுவனத்தின் ஏற்பட்டுள்ளது. அதற்கு உண்டான ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. இந்த நிறுவனத்தை கலைவாணி மற்றும் கல்யாணி ஆகிய இருவர் இடமும் ஒப்படைத்த சமயததில் எங்களிடம் காசோலைகள் இல்லை, ஆகையால் அவைகளை நாங்கள் மாற்றம் செய்யவில்லை. அரிசி கடனான கொடுத்தற்கான 6 Invoice Bill நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். இந்த மேற்சொன்ன ஆவணத்தில் எதிரி மற்றும் குணசேகரன் ஆகியோரின் கையொப்பங்கள் இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.